# பெருக்கல் - 2

வாரம் 17




## 2 ஆல் பெருக்கல்

உதாரணம்:



$$\begin{array}{r} 3 \\ \times 2 \\ \hline 6 \end{array}$$

3 x 2 = 6

**1** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 6 | 9 | 10 | 12 | 24 |
| × 2 | × 2 | × 2 | × 2 | × 2 |

# பெருக்கல் - 2

## மேலும் 2 ஆல் பெருக்கல்

உதாரணம்:

பதினேழை 2 ஆல் பெருக்குதல்.

| | |
|---|---|
| 17 → | 10+7 |
| × 2 | |
| 14 | 7×2 |
| +20 | 10×2 |
| 34 | |

17 ஐ இரண்டால் பெருக்கும் போது முதலில் ஏழு 2ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது $7 \times 2 = 14$ ஆகும்.
பின்னர் பத்து 2 ஆல் பெருக்கப்பட்டுள்ளது.
அப்போது $10 \times 2 = 20$ ஆகும்.
பின்னர் 14 உம் 20 உம் கூட்டப்பட்டுள்ளன.

**2** பிரதி செய்து விடை எழுதுங்கள்.


| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 5 | 1 8 | 2 6 | 3 7 | 4 9 |
| × 2 | × 2 | × 2 | × 2 | × 2 |

(6) ஒரு குழியில் 2 மிளகாய் நாற்றுகள் வீதம் 36 குழிகளில் நாட்டுவதற்கு எத்தனை மிளகாய்க் கன்றுகள் தேவை?

(7) ஒரு வரிசையில் இருவர் வீதம் மாணவர் நிற்கின்றனர். அவ்வாறான 47 வரிசைகளில் நிற்கும் மாணவர் தொகை எவ்வளவு?

## 3 ஆல் பெருக்கல்

உதாரணம்:



$4 \times 3 = 12$

| |
|---|
| 4 |
| × 3 |
| 12 |

**3** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2 | 5 | 6 | 1 0 | 1 2 |
| × 3 | × 3 | × 3 | × 3 | × 3 |

# பெருக்கல் - 2

வாரம் 17

## மேலும் 3 ஆல் பெருக்கல்

உதாரணம்: இருபத்துநான்கை 3 ஆல் பெருக்கல்

| | | |
|---|---|---|
| 24 | → | 20+4 |
| × 3 | | |
| 12 | | 4×3 |
| +60 | | 20×3 |
| 72 | | |

24 ஐ மூன்றால் பெருக்கும் போது, முதலில் நான்கு 3 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது $4 \times 3 = 12$ ஆகும்.
பின்னர் இருபது 3 ஆல் பெருக்கப்பட்டுள்ளது.
அப்போது $20 \times 3 = 60$ ஆகும்.
பின்னர் 12 உம் 60 உம் கூட்டப்பட்டுள்ளன.

**4** விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 14 | 15 | 19 | 25 | 35 |
| × 3 | × 3 | × 3 | × 3 | × 3 |

(6) ஒரு மின்விசிறியில் 3 அலகுகள் உள்ளன. அவ்வாறான 24 மின் விசிறிகளில் எத்தனை அலகுகள் உள்ளன.

(7) ஒரு பிள்ளைக்கு 3 வாழைப்பழங்கள் வீதம் வழங்கப்பட்டது. 26 பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு எத்தனை வாழைப்பழங்கள் தேவை?

## 4 ஆல் பெருக்கல்

உதாரணம்:



3
×4
12

$3 \times 4 = 12$

**5** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 10 | 12 |
| × 4 | × 4 | × 4 | × 4 | × 4 |

வாரம் 17

# பெருக்கல் - 2

## மேலும் 4 ஆல் பெருக்கல்

**உதாரணம்:** பதினைந்தை 4 ஆல் பெருக்குதல்

$$\begin{array}{r} 15 \\ \times\ 4 \\ \hline 20 \\ +40 \\ \hline 60 \end{array}$$

15 ⟶ 10+5

20 — 5 × 4

+40 — 10 × 4

60

15ஐ நாலால் பெருக்கும் போது, முதலில் ஐந்து 4ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது 5 × 4 = 20 ஆகும். பின்னர் பத்து 4 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது 10 × 4 = 40 ஆகும். அடுத்ததாக 20 உம் 40 உம் கூட்டப்பட்டுள்ளன.

**6** பிரதி செய்து விடை எழுதுங்கள்.


| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 3 | 1 8 | 2 4 | 2 5 | 2 9 |
| × 4 | × 4 | × 4 | × 4 | × 4 |

(6) கார் ஒன்றிற்கு 4 சில்லுகள் உள்ளன. அவ்வாறான 35 கார்களுக்குத் தேவையான சில்லுகள் எத்தனை?

(7) ஒரு பிள்ளைக்கு 4 விசுக்கோத்து வீதம் 37 பிள்ளைகளுக்கு எத்தனை விசுக்கோத்துகள் தேவை?

## 5 ஆல் பெருக்கல்

**உதாரணம்:**



$$\begin{array}{r} 4 \\ \times 5 \\ \hline 20 \end{array}$$

4 × 5 = 20

**7** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2 | 5 | 8 | 1 0 | 1 1 |
| × 5 | × 5 | × 5 | × 5 | × 5 |

# பெருக்கல் - 2

வாரம் 17

## மேலும் 5 ஆல் பெருக்கல்

உதாரணம்:

பதின்மூன்றை 5 ஆல் பெருக்கல்

| | | |
|---|---|---|
| 13 | → | 10+3 |
| × 5 | | |
| 15 | | 3×5 |
| +50 | | 10×5 |
| 65 | | |

13 ஐ ஐந்தால் பெருக்கும் போது, முதலில் மூன்று 5 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது 3 × 5 = 15 ஆகும்.
அடுத்து பத்து 5 ஆல் பெருக்கப்பட்டுள்ளது.
அப்போது 10 × 5 = 50 ஆகும்.
அடுத்ததாக 10 உம் 50 உம் கூட்டப்பட்டுள்ளன.

**8** பிரதி செய்து விடை எழுதுங்கள்.


| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 12 | 15 | 17 | 19 | 25 |
| × 5 | × 5 | × 5 | × 5 | × 5 |

(6) ஒரு தோடம் பழம் ரூபாய் 5 வீதம் 33 தோடம் பழங்களின் விலையைக் காணுங்கள்.

(7) ஒரு வரிசையில் 5 கன்றுகள் வீதம் 46 வரிசைகளில் தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. நடப்பட்டுள்ள தென்னங்கன்றுகளின் தொகை எவ்வளவு ?

## 6 ஆல் பெருக்கல்

உதாரணம்:



4 × 6 = 24

| |
|---|
| 4 |
| ×6 |
| 24 |

**9** விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 9 | 10 |
| × 6 | × 6 | × 6 | × 6 | × 6 |

## வாரம் 17

# பெருக்கல் - 2

## மேலும் 6 ஆல் பெருக்கல்

உதாரணம்: பதினான்கை 6 ஆல் பெருக்கல்

```
  14  ──→  10+4
× 6
  24        4×6
+60        10×6
  84
```

14 ஐ ஆறால் பெருக்கும் போது, முதலில் நான்கு 6 ஆல் பெருக்கப்பட்டுள்ளது. அப்போது 4 × 6 = 24 ஆகும்.
அடுத்து பத்து 6 ஆல் பெருக்கப்பட்டுள்ளது.
அப்போது 10 × 6 = 60 ஆகும்.
பின்னர் 24 உம் 60 உம் கூட்டப்பட்டுள்ளன.

**10** பிரதி செய்து விடை எழுதுங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 2 | 1 5 | 1 7 | 2 3 | 2 7 |
| × 6 | × 6 | × 6 | × 6 | × 6 |

(6) ஒரு பெட்டியில் 6 தட்டுக்கள் அடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான 26 பெட்டிகளில் உள்ள தட்டுக்கள் எத்தனை?

(7) ஒரு வாழைப்பழம் ரூபாய் ஆறு வீதம் 45 வாழைப்பழங்களின் விலை எவ்வளவு?

